# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.**

| | | |
|---|---|---|
| **Case No** | **: S.T.C.444/2021** | **Date:01.09.2023** |
| **Deposition of Witness for** | **: அ.சா.1** | |
| **Name** | **: கதிரவன்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை-**

1) நான் எத்தனை வருடம் நிதி வணிகம் செய்து வருகிறேன் என்றால் சுமார் 10 வருடங்களாக. மேற்படி வணிகத்திற்கு பெயர் உள்ளதா என்றால் இல்லை. கூட்டு நிறுவனமா என்றால் இல்லை தனிப்பட்ட முறையில் நடத்தி வருகிறேன். திருப்பூர் மாவட்டம் நல்லூரில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் வைத்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேனா என்றால் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை எனக்கு தெரிந்த 10 அல்லது 20 நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன்.

2) திருப்பூர் எந்தெந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் HDFC Bank, ICICI Bank, State Bank of India. சங்ககிரியில் எந்தெந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் சிட்டி யூனியன் பேங்க். எனது சொந்த ஊரான ஆத்தூரில் எந்தெந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் வங்கி கணக்கு இல்லை. திருச்செங்கோட்டில் வங்கி கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. ஆத்தூரைச் சேர்ந்த சிவக்குமார், பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த சதாம்உசேன், திருப்பூரை சேர்ந்த சந்திரசேகர் மற்றும் எனது தந்தை லட்சுமணன் ஆகியோர்களுடன் நான் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல.

3) எதிரியை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 10 வருடங்களாக எனக்கு தெரியும். சேலத்தை சேர்ந்த செங்கோட்டுவேல் என்பவர்

மூலமாக தான் எதிரி எனக்கு பழக்கம் என்றால் சரியாக ஞாபகமில்லை. எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் 2020-ம் வருடம் கேட்டார், ஏப்ரல் மாதமா அல்லது மே மாதமா என்று சரியாக சொல்லமுடியவில்லை. எதிரி என்னிடம் 5 லட்சம் கேட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 3 லட்சம் ஏன் தொகையாக கொடுத்தேன் என்றால் எனது வங்கி கணக்கில் பணம் அப்போது இல்லை என்பதால் தொகையாக கொடுத்தேன். எப்போது 3 லட்சம் கொடுத்தேன் என்றால் 02.06.2020-ம் தேதி. 3 லட்சம் வங்கி கணக்கில் இல்லை என்று தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை ரூபாய் வட்டிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் மாதம் ஒன்றுக்கு 100-க்கு 1 ரூபாய் வீதம் வட்டி தருவதாக அவர் சொன்னார். மேற்படி சங்கதியை ஏன் புகாரில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வது பொய் என்பதால்தான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 5 லட்சம் தொகைக்கு என்ன செக்யூரிட்டி வாங்கினேன் என்றால் புரோ நோட் வாங்கினேன். நான் சொல்வது போல் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றும், எதிரி எனக்கு புரோ நோட் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு புரோ நோட் கொடுத்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

4) எதிரி என்னிடம் 24.11.2018-ல் ரூபாய் 4 லட்சம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படி கடனுக்கு செக்யூரிட்டிக்காக எதிரியின் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, திருப்பூர் கிளையின் 117501, 772750, 772751 ஆகிய எண்கள் கொண்ட கையொப்பம் மட்டும் செய்து மற்றவை நிரப்பப்படாத வெற்று காசோலைகள் மற்றும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா, திருப்பூர் கிளையின் 02089689 முதல் 02089700 வரை மற்றும் 02095769, 02090741, 02095781, 02095782 ஆகிய எண்கள் கொண்ட கையொப்பம் மட்டும் செய்து மற்றவை நிரப்பப்படாத வெற்று காசோலைகள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட புரோ நோட்டுகள் மற்றும் முத்திரை தாள்கள் ஆகியவை கொடுத்தார் என்றால் சரியல்ல.

5) மேற்படி 4 லட்சம் ரூபாய் தொகைக்கு 100-க்கு 10 ரூபாய் வீதம் வாரத்திற்கு 16,000/- எதிரி வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி தொகைகளை எதிரி என்னுடைய வங்கி கணக்கிலும், சந்திரசேகர் வங்கி

கணக்கிலும், சதாம்உசேன் வங்கி கணக்கிலும் மற்றும் சிவக்குமார் வங்கி கணக்கிலும் செலுத்தியுள்ளார் என்றால் மேற்படி நபர்களை தெரியும் ஆனால் மேற்படி வரவு செலவுகள் குறித்து கூறுவது தவறு.

6) மேலும் என்னுடைய அறிவுறுத்தலின்பேரில் பிரசாத் என்பவரின் வங்கி கணக்கிலும் எதிரி பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, பிரசாத் என்பவரை தெரியும் ஆனால் அவர்களுக்குள் இருந்த வரவு செலவுகள் எனக்கு தெரியாது. எனது வங்கி கணக்கில் அதிகப்படியான வரவு செலவுகள் நடைபெற்றதால் எதிரியுடன் சுமூக உறவில் இருந்தபோது எதிரியிடம் வேறு நபர்கள் எதிரியின் வங்கி கணக்கிற்கு நான் கூறியதின் பேரில் பணம் அனுப்பியுள்ளார்கள் என்றும், அவ்வாறு அனுப்பிய பணத்தை நான் கூறும் நபருக்கு எதிரி மாற்றி அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல.

7) நான் கூறியதின் பேரில் 19.02.2020-ல் வேலவன் நீட்ஸ் என்ற வங்கி கணக்கிலிருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 4 லட்சம் பணம் பறிமாற்றம் செய்யப்பட்டது என்றும், மேலும் எதிரியிடம் நான் ரூபாய் 3 லட்சம் கொடுத்து 20.02.2020 ல் ஆத்தூரை சேர்ந்த சுப்பிரமணி ராமசாமி என்பவரின் வங்கி கணக்கிற்கு எதிரியின் வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 7 லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வேலவன் நீட்ஸ் என்ற கம்பெணியை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

8) அதேபோன்று 01.06.2020 ல் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 2 லட்சம் நான் அனுப்பிவிட்டு பிறகு எதிரியிடமிருந்து ரொக்கமாக 2 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்றால் பணம் அனுப்பியது உண்மை ஆனால் பணம் திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று 23.06.2020 ல் சிவக்குமார் என்பவரின் வங்கி கணக்கிலிருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 6 லட்சம் பணபறிமாற்றம் செய்யப்பட்டது என்றும், மேற்படி தொகையை மறுநாளே வந்தவாசியை சேர்ந்த சின்னராஜ் மகன் வெங்கடேசன் என்பவரின் கணக்கிற்கு நான் கூறியதின் பேரில் எதிரி அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வெங்கடேசனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம். கதிரவன்

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2023.09.01 16:47:36 -1000

நீதித்துறை நடுவர் எண்.1

சங்ககிரி.